திண்டுக்கல் மாவட்ட நிலஅளவைப் பதிவேடுகள் துறை, உதவி இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிஅ) அவர்களின் செயல் முறை ஆணை.

ஆணையிடுபவர்:- திரு. கோ.அன்புச்செல்வன்,எம்.காம்.,

ந.க.அ2/1728/19

நாள்: 28 .05.2019

பொருள்: பொதுப்பணி - நிலஅளவைப்பதிவேடுகள் துறை - திண்டுக்கல் மாவட்டம் - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் 2015-16,2016-2017 மற்றும் 2018-2019-ம் ஆண்டு தொகுதி IV-ன் மூலம் இளநிலைஉதவியாளர் பதவிக்கு திரு. இரா.சுருளிராஜ் என்பவரை திண்டுக்கல் மாவட்ட நிலஅளவைப்பதிவேடுகள் துறைக்கு ஒதுக்கீடு செய்து இளநிலைஉதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டது- இளநிலைஉதவியாளர் இனத்தில் பணிவரன்முறை செய்து ஆணை பிறப்பித்தல் - தொடர்பாக.

பார்வை:
1) தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளரின் கடிதம் எண். 1162/PSD - H1/ 2019 நாள்:18.02.2019.
2) சென்னை, நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க. ர2/38646/2018(நிஅ)(2) நாள்: 08.03.2019.
3) இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க. அ2/1728/19 நாள்: 09.03.2019.
4) திரு. இரா.சுருளிராஜ், இளநிலைஉதவியாளர் பணியேற்பு நாள்: 11.03.2019.
5) சென்னை , நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க. ர2/38646/2018(நிஅ) நாள்: 13.05.2019.

--------------

ஆணை:

பார்வை 1-ல் காணும் கடிதம் மற்றும் பார்வை 2,3-ல் காணும் செயல்முறை ஆணைகளின்படி தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV-ன் மூலமாக திண்டுக்கல் மாவட்ட நிலஅளவைப்பதிவேடுகள் துறை உதவிஇயக்குநர் அலுவலகத்திற்கு இளநிலைஉதவியாளராக ஒதுக்கீடு செய்து பணி நியமனம் செய்ததன்படி திரு.இரா. சுருளிராஜ் எனபவர் இளநிலைஉதவியாளராக 11.03.2019 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருகிறார். இவருக்கு தமிழ்நாடு மாநில (ம) சார்நிலைப்பணி பொதுவிதி 35(எ)-ன் படி இளநிலைஉதவியாளர் இனத்தில் பணியில் சேர்ந்த நாளான 11.03.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

இப்பணிவரன்முறை உத்தரவு சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மதுரை கிளையில் நிலுவையில் உள்ள வழக்கின் தீர்ப்பிற்கு உட்பட்டதாகும்.

மேலும் தனியருக்கு பணிவரன்முறை செய்த தேதி முதல் தகுதிகாண்பருவம் துவங்கப்படுகிறது என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது.

28.5.19

உதவிஇயக்குநர் மற்றும் மாவட்ட
ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிஅ),
திண்டுக்கல்.

28.5.19

பெறுநர்:
திரு. இரா.சுருளிராஜ், இளநிலைஉதவியாளர்,
மாவட்ட நிலஅளவை அலுவலகம்,
திண்டுக்கல். (கண்காணிப்பாளர் -2 மூலமாக)

நகல்: பணிப்பதிவேட்டிற்கு
நகல்: பணிவரன்முறை மற்றும் தகுதிகாண்பருவம் விளம்பல் பதிவேட்டிற்கு
நகல்: இயக்குநர், நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டம், சென்னை - பணிந்தனுப்பப்படுகிறது.
நகல்: கூடுதல் இயக்குநர், நிலஅளவைப்பதிவேடுகள் துறை, சென்னை - பணிந்தனுப்பப்படுகிறது.
நகல்: மண்டலத்துணை இயக்குநர், நிலஅளவைப்பதிவேடுகள் துறை,
மதுரை -பணிந்தனுப்பப்படுகிறது.
நகல்: அ7, அ1। இருக்கைக்கு புதிய எண்ணில்.
நகல்: உபரி -5